1978 மார்ச் 21]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

வேளாண்மைப் பணிகளுக்கு மின் இணைப்பு.

(துணை வினா இல்லை.)

*641 வினா—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில், சிங்களம் கோம்பை, வரதராஜபுரம் முதலிய கிராமங்களில் விவசாயத்திற்கு மின் இணைப்புக் கொடுக்க மறுப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், மின் இணைப்புக் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மற்றும் (ஆ). நிலுவையிலுள்ள மனுக்களுக்கு மின் இணைப்பு வழங்க அரசு ஒரு முன்னுரிமை பட்டியல் தயாரித்திருக்கிறது. இந்த வழி முறைக்கு ஏற்ப சிங்களம்கோம்பை, வரதராஜபுரம் முதலிய கிராமங்களில் மின் இணைப்பு வழங்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த சிங்களம்கோம்பை, வரதராஜபுரம் ஆகிய இடங்களில் எவ்வளவு பேருக்குக் கொடுக்கப்படும், எவ்வளவு சீக்கிரம் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கிராமப்புற மின் வசதி திட்டத்தின் கீழ் வரதராஜபுரத்தில் இருந்து 15 மனுக்களும் சிங்களம்கோம்பையில் இருந்து 28 மனுக்களும் வரப் பெற்றுள்ளன. வரதராஜபுரத்திலிருந்து வரப்பேற்ற 15 மனுக்கள் எடுத்துக் கொள்ளப்படும். சிங்களம்கோம்பையிலிருந்து வரப்பெற்ற 28 மனுக்களில் 18 சிக்கனம் அற்றவைகளாக இருக்கின்றன. மீதமுள்ள 10 ஆய்வில் உள்ளன.

சந்தனத் தைலம் மற்றும் சோப்பு தயாரிப்பு.

*642 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

தமிழ்நாட்டில் வளரும் சந்தன மரத்தைக் கொண்டு இங்கேயே ஒரு சந்தனத் தைலம் மற்றும் சோப்பு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்குப் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தமிழ்நாட்டில் காடுகளிலிருந்து கிடைக்கப்பெறும் சந்தன மரங்களைக் கொண்டு சந்தனத் தைலம் மற்றும் அகர் பத்தி தயாரிக்கும் தொழிற்சாலை களுக்கான திட்டம் ஒன்று அரசின் பரிசிலனையில் உள்ளது. சோப்பு தயாரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

*643 வினு—திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைசசர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :—

வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூர் பகுதியில் சந்தனத் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தமிழ்நாட்டின் காடுகளிலிருந்து கிடைக்கப்பெறும் சந்தன மரங்களைக்கொண்டு சந்தன தைலம் மற்றும் அகர்பத்தி தயாரிக்கும் தொழிற்சாலைக் கான திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது என்ருலும், இடம் இன்னும் தேர்வு செய்யப்படவில்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, நமக்கு அண்டையிலே உள்ள கேரளாவிலும், அதைப்போல கர்நாடகாவிலும் சந்தன சோப்புகள் தயாரிக்கப்படுகின்றன. கேரளாவில் கேரளா சான்டல்உட் சோப் என்றும், கர்நாடகத்திலே மைசூர் சான்டல் உட் சோப் என்றும் தயாரிக்கப்படுகின்றன. அதைப்போல தமிழ் நாட்டிலேயும் சந்தன சோப்புகள் தயாரிக்க அரசு முன்வருமா, அல்லது தனியார் யாராவது இந்தத் தொழில் நடத்துவது பாதிக்கப்படும் என்று இது தவிர்க்கப்படுகிறதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, தனியார் யாருக்கும் எவ்வித சலுகையும் காட்டவேண்டும் என்ற நோக்கத்தோடு இதைத் தவிர்க்கவில்லை. இதற்கு முன்னுலேயே தமிழ்நாட்டிலிருந்து கிடைக்கும் ஏராளமான சந்தனக் கட்டைகளைக் கொண்டு சந்தனத் தைலம், ஊதுபத்தி போன்றவைகள் தயாரிக்கும் முயற்சிகளை இதுவரையிலும் யாரும் எடுத்துக்கொள்ளவில்லை. எனினும் இந்த அரசு சந்தன மரத்தில் இருந்து எண்ணை எடுத்தல், ஊதுபத்தி தயாரிப்பது போன்றவைகளில் தனியார் யாருக்கும் சலுகை காட்டுவதாக இல்லை. காடுகளில் இருந்து கிடைக்குப் இந்த சந்தன மரங்களைப் பயன்படுத்தி இந்த நாட்டை தொழில் மயமாக்கவேண்டும் என்ற நல்ல எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லி புத்தூர் அருகில் உள்ள அழகர் கோவில் மலைக்காடுகளில் சந்தன மரங்கள் அதிகமாக இருக்கின்றன. அவைகளை நல்லமுறையில்